**ஸ்ரீ ஆனந்த விநாயகர் அறக்கட்டளை** [**மத்ய கைலாஸம்**]
1 , **சர்தார் படேல் ரோடு**, **தரமணி அஞ்சல்**, **சென்னை** - 600113 .
**தொலை பேசி**: 22350859 / 22300936 / 22200858
**மின் அஞ்சல்**: madhyakailash@gmail.com

# மஹாளயம்

## சில தகவல்கள்

### அனுஷ்டிக்க வேண்டிய காலம்

நம்மில் பலர், இந்த பித்ரு வைபவம், புரட்டாசி மாதத்தில் வருவதாகக் கருதுகிறோம்.

இது சரியல்ல.

இது நேரும் காலம், சாந்த்ரமான சம்பிரதாயத்தை ஒட்டிய, பாத்ரபத மாத கிருஷ்ண பக்ஷ பிரதமை (ச்ராத்த) திதி முதல் பாத்ரபத கிருஷ்ண பக்ஷ அமாவாசை (ச்ராத்த) திதி வரை உள்ள 15 நாட்களே - என்பதுதான் சரியானதாகும்.

உதாரணமாக, 'கர' வருடத்தில் - மஹாளய பக்ஷம் ஆவணி மாதத்திலேயே தொடங்கியது என்பதை கவனிக்கலாம்.

### ப்ரமாணங்கள்

ஜாதுர்கணி: ஆஷாட பூர்ணிமையிலிருந்து ஐந்தாவது பக்ஷம் (பாத்ரபத பஹுள ப்ரதமா திதி முதல்) - “நைர்யோகிகீ” திதிகள் எனப்படுகிறது. அந்த பக்ஷத்தில் செய்த ஹோமம், கொடுக்கப்பட்ட அன்னம் - அக்ஷயமாகும்.

*வ்ருத்த மனு:* சூர்யன் கன்யா ராசியை அடையும் காலமானது [பாத்ரபத பஹுள பக்ஷம்] மஹாளயம் என்பதாம்.

*காலாதர்சகாரர்:* சூர்யன் கன்யா ராசியை பாத்ரபத பஹுள பக்ஷத்தில் அடைவதால், இந்த மஹாளய பக்ஷம் புண்ய காலம் எனப்படுகிறது.

மேலும்

வருடாந்திர ச்ராத்தம், மஹாளய அமாவாசையில் செய்ய வேண்டியிருந்தால், அதை முதலில் செய்துவிட்டு, மஹாளய தர்ப்பணத்தை பிறகு வரும் ஆச்வயுஜ / சுக்ல / பஞ்சமி திதியில் செய்ய வேண்டும்.

கர்த்தாவின் குடும்பத்தில் ஏற்படும் ஜனன மரண காரணங்களினால், ஏற்படும் சூதக (வ்ருத்தி அல்லது ஜனன) ஆசௌச (மரண) தீட்டினால், மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டிய நாள், மஹாளய அமாவாசைக்குக்குப் பிறகு செய்ய நேரிடலாம்.

இந்த வகையில், மஹாளய பக்ஷ காலமானது ஆச்வயுஜ மாதம் முடியும் வரை கணக்கிடலாம் என்று கருதும் ஆதாரங்களும் உள்ளன.

### முக்கியத்துவம்

*ஆதித்ய புராணம் / மத்ஸ்ய புராணம் / காலாதர்சகாரர்*

வர்ஷ ருதுவில், யமன் தனது பட்டணத்தை சூன்யமாக்கி, அங்கிருந்த பிரேதங்களையும், பித்ருக்களையும் வெளியேற்றி - மனுஷ்ய லோகத்தில் வசிக்கும்படி செய்கிறான்.

அந்த பித்ருக்கள் பசியினால் வருந்தியவர்களாய், தங்களால் செய்யப்பட்ட பாபங்களை நினைத்தவர்களாய், புத்ரர்கள், பௌத்ரர்கள் - இவர்களிடமிருந்து - அன்னம், நெய், எள், குளிர்ந்த ஜலம் - (ஆகியவற்றை) - விருப்பமுடன் எதிர்பார்த்து இருக்கின்றனர்.

இதற்காக, ஆச்வயுஜ [ஐப்பசி - துலா] மாத இறுதி வரை கூட ஆர்வத்துடன் மனுஷ்ய லோகத்தில் சஞ்சாரம் செய்கின்றனர்.

இதனை உணர்ந்து, மனமுருகி நன்றியுடன் மஹாளய பக்ஷ காலத்தில் மஹாளய தர்ப்பணத்தை தன் முன்னோர்களுக்கு செய்யும் கர்த்தாக்கள் / புத்ரர்கள் [மற்றும் அவர்களின் சந்ததிகள்] ஆகியோரை, சம்பந்தப்பட்ட பித்ருக்களும், பித்ரு தேவதைகளும், பித்ரு கணங்களும் மிகுந்த சந்தோஷத்துடன் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றனர்.

அவ்விதமாக மஹாளய தர்ப்பணம் பெற இயலாத பித்ருக்கள், மிகுந்த வருத்தத்துடன், கார்த்திக மாதத்தில் [கார்த்திகை - வ்ருச்சிக] யமப் பட்டிணத்தை மீண்டும் சென்று அடைகின்றனர்.

## பலன்கள்

*மத்ஸ்ய புராணம்*: மஹா பரணியில் (மஹாளய) ச்ராத்தம் செய்தவன் கயா ச்ராத்தம் செய்தவன் ஆவான்.

*ப்ரம்ஹாண்ட புராணம்*: மத்யாஷ்டமி “கயா” எனப்படுகிறது. த்ரயோதசி “கஜச்சாயை” எனப்படுகிறது. இரண்டும் கயா ச்ராத்ததிற்கு சமமாகிறது.

*காலாதர்சகாரர்*: மஹாளய பக்ஷத்தில் - பரணி (மஹா பரணி), அஷ்டமி (மத்யாஷ்டமி), த்ரயோதசி (கஜச்சாயை) - கயா ச்ராத்ததிற்கு இணையானது.

## அடிப்படை விதி முறைகள்

*பித்ரு மேத ஸாரம் / காலாதர்சகாரர்*

இரண்டு விதமாக செய்யலாம்:

1) பக்ஷ மஹாளய தர்ப்பணம்.
2) ஸக்ருன் மஹாளய தர்ப்பணம்.

பக்ஷ மஹாளய தர்ப்பணம்:

மஹாளய பக்ஷ கால கட்டமாகிய 16 நாட்களில், முடிந்த வரையில், கீழ்க்கண்ட ஏதாவது தொடர் நாட்களில், விட்டு விடாமல் தொடர்ச்சியாக தினமும் மஹாளய தர்ப்பணம் செய்தால், அதனை 'பக்ஷ மஹாளயம்' என்பர்.

அதாவது:

1) பாத்ரபத பஹுள பிரதமை முதல் ஆச்வீஜ சுக்ல பிரதமை வரை - 16 நாட்கள்; அல்லது

2) பாத்ரபத பஹுள பிரதமை முதல் பாத்ரபத அமாவாசை வரை - 15 நாட்கள்; அல்லது

3) பாத்ரபத பஹுள பஞ்சமி முதல் பாத்ரபத அமாவாசை வரை - 11 நாட்கள்; அல்லது

4) பாத்ரபத பஹுள அஷ்டமி முதல் பாத்ரபத அமாவாசை வரை - 8 நாட்கள்; அல்லது

5) பாத்ரபத பஹுள தசமி முதல் பாத்ரபத அமாவாசை வரை - 5 நாட்கள்.

ஸக்ருன் மஹாளய தர்ப்பணம்:

மேற்கூறிய 'பக்ஷ மஹாளய தர்ப்பணம்' செய்ய இயலாதவர்கள் [கால, தேச, வர்த்தமானங்களை உத்தேசித்து], மஹாளய பக்ஷ காலத்தில், மஹாளய சதுர்த்தி திதிக்கு பிறகு, மஹாளய பக்ஷ பஞ்சமி திதியிலிருந்து அமாவாசைக்குள், அனுமதிக்கப்பட்ட ஏதாவது அல்லது குறிப்பிட்ட திதியில், மஹாளய தர்ப்பணம் செய்யலாம்.

இவ்விதம் செய்யும் தர்ப்பணத்தை - ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் என்பர்.

## நடை முறையில் உள்ளது

நம்மில் அனைவரும் மஹாளய தர்ப்பணம் செய்ய மனதார்வத்துடன் நினைக்கிறோம்.

பலர் செய்கிறோம்.

ஆனால் அதனை செய்ய வேண்டிய க்ரமத்துடன் செய்வதற்கான, சாஸ்திர பிரமாணங்கள ஒட்டிய நம்பகமான அறிவுரை மற்றும் ஆலோசனை இல்லாததால், அவரவர் பாரம்பர்யம் / சிஷ்டாசாரம் / தேசாசாரம் முதலானவற்றை ஒட்டி, தெரிந்த வகையில் மஹாளய தர்ப்பணத்தை செய்கின்றோம்.

இதில் சில குறைகளும் உள்ளன. உதாரணமாக:

1) பலர் தங்களது முன்னோர் மரித்த அதே திதியில் [பக்ஷ பேதம் கருதாமல்] மஹாளய தர்ப்பணம் செய்கிறோம். மஹாளய தர்ப்பண விதி க்ரமத்தில் இவ்விதம் செய்ய உத்தேசம் இல்லை.

2) சுமங்கலியாக மரணமடைந்த தாயாருக்கு / பெண்மணிக்கு, மஹாளய பக்ஷத்தில் வருங்கின்ற நவமி திதியில் [அவிதவா நவமி] ஒரு சாரார் மஹாளய தர்ப்பணம் செய்கின்றனர்.

அடிப்படையில், ஒரு பெண்மணிக்கு வருடத்தில் ஒரு முறைதான் - அதாவது - வருடாந்திர [பிரத்யாப்தீக] ச்ராத்தம் செய்யலாம் என்பது பெரியோர் வாக்கு.

தந்தைக்கு மஹாளய தர்ப்பணம் செய்யும் அதே நாளில் தாயாருக்கும் சேர்ந்துதான் மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டும்.

மேலும், மேற்கூறிய 'அவிதவா நவமி' என்பது 'விரத' க்ரமத்தை சார்ந்த வைபவம் ஆகும். மஹாளய தர்ப்பண க்ரமத்தை சார்ந்தது அல்ல.

## சில நெறிமுறைகள்

1) மஹாளய பக்ஷத்தில் குறிப்பிடப்படும் திதிகள் மற்றும் விசேஷ நாட்களான - பஞ்சமி / மஹா பரணி / மஹாவ்யதீபாதம் / மத்யாஷ்டமி / கஜச்சாயை / அமாவாசை - ஆகியவை நிஷித்தம் இல்லாத [தோஷமற்ற] மஹாளய திதிகளாகக் கருதப்படுகிறது.
2) ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்ய விரும்புபவர்கள், மஹாளய அமாவாசை திதியில் தர்ப்பணம் செய்வதற்கு சாஸ்திர ரீதியாக செய்ய அனுமதி இல்லாதவர்கள், மேற்கூறிய நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் மஹாளய தர்ப்பணம் செய்வது சாலச் சிறந்தது.
3) தவிர்க்க முடியாத காரணங்களினால், ஒரு கர்த்தா மேற்கூறிய தோஷமற்ற நாட்களைத் தவிர வேறொரு நாளில் ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அப்பொழுது கர்த்தா, கர்த்தாவின் மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகிய அனைவரின் பிறந்த நக்ஷத்ரங்களின் பொருத்தம்

சரி பார்த்து, ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டிய நாளை நிதானிக்க வேண்டும்.

4) ஸன்யாச தர்மத்தை மேற்கொண்டு அதன் வழி நடந்த பித்ருக்களை உத்தேசித்து செய்யப்படும் மஹாளய தர்ப்பணத்தை, மஹாளய த்வாதசி திதியில்தான் செய்ய வேண்டும் [ஸந்யஸ்த மஹாளயம்].

5) சுய முடிவினால் (தற்கொலை) அல்லது தன்னிலை மீறிய குரூரமான சூழ்நிலையில் - விபத்தினால் / போரினால் / ஆயுதங்களினால் / மனிதர்களால் / மிருகங்களினால் / மரங்கள் மேலே விழுந்ததினால்/ வெள்ளத்தினால், இன்ன பிற காரணங்களினால் கொலையுற்ற (அல்லது) மரணமடைந்த பித்ருக்களுக்கு, மஹாளய பக்ஷ சதுர்தசி திதியில்தான் ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டும் (சஸ்த்ர ஹத மஹாளயம்).

6) முக்யமாக, மேற்கூறிய விதங்கள் அல்லாமல் சாதாரண மரணம் எய்திய பித்ருக்களுக்கு, மஹாளய பக்ஷ சதுர்தசி திதியில் ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்யக் கூடாது.

7) ஆனால், பக்ஷ மஹாளய தர்ப்பணம் செய்பவர்கள், சதுர்தசி திதியிலும் மஹாளய தர்ப்பணம் செய்யலாம். பக்ஷ மஹாளய தர்ப்பண க்ரமத்தில், பித்ருவின் மரண விதத்தில் - சாதாரண (அல்லது) குரூர மரணம் - என்கின்ற பாகுபாடு கிடையாது.

8) ப்ருமச்சாரிகள் (திருமணம் ஆகாதவர்கள்), புத்ரபாக்கியம் அற்றவர்கள், விதவைகள், மனைவியை இழந்தவர்கள், சன்யாசிகள் – ஆகியோர், ஸக்ருன் மஹாளய தர்ப்பணத்தை அமாவாசை அன்றுதான் செய்ய வேண்டும். வேறு நாட்களில் செய்யக்கூடாது.

9) புத்திர பாக்கியம் உள்ள கர்த்தாக்கள் அமாவாசையில் ஸக்ருன் மஹாளய தர்ப்பணம் செய்யக்கூடாது. மஹாளய பக்ஷத்தில் தோஷம் இல்லாத நாட்களாக கருதப்படும் - பஞ்சமி, மஹா பரணி, மத்யாஷ்டமி, மஹாவ்யதீபாதம், த்ரயோதசி (கஜ சாயை) - இவற்றில் ஏதேனும் ஒரு நாளில் செய்யலாம்.

10) பிரத்யாப்தீக (வருடாந்திர) ச்ராத்தம், மஹாளய பக்ஷத்தில் வருமேயானால், முதலில் வருடாந்திர ச்ராத்தம் செய்துவிட்டு, அதன் பிறகு மஹாளய தர்ப்பணம் செய்ய வேண்டும்.

11) இதன் அடிப்படையில், வருடாந்திர ச்ராத்தம், மஹாளய அமாவாசையில் செய்ய வேண்டியிருந்தால், அதை முதலில் செய்துவிட்டு, மஹாளய தர்ப்பணத்தை பிறகு வரும் ஆச்வயுஜ / சுக்ல / பஞ்சமி திதியில் செய்ய வேண்டும்.

## விசேஷ அனுமதி

மஹாளய பக்ஷத்தில் ஒரு கர்த்தா தனது தகப்பனார் தாயார் தவிர, தனது விருப்பம் / மரியாதைக்கு உகந்த, வேண்டிய நபருக்கு [உறவு / ஸ்நேஹிதம் / குரு] -'காருண்ய பித்ரு' என்கின்ற வகையில் மஹாளய தர்ப்பணம் செய்ய அனுமதி உண்டு.

ஆதாரம்

# நிர்ணய சிந்து # வைத்யநாத தீக்ஷதீயம் # ஸ்ம்ருதி கௌஸ்துபம்.